(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 11 (4).]

# பாராளுமன்றம்

## 11 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2014 யூன் 06 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2014 யூன் 17, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— கம்பனிகள் சட்டம் மற்றும் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2007 ஆம் ஆண்டில் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 477 மற்றும் 157 (5) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 527 ஆம் ஆம் பிரிவின் கீழும் 2005 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, சங்கங்கள் கட்டளைச் சட்டம் மீளத் (திருத்தப்பட்ட) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1891 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (123 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவின் கீழும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2013 திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1841/8 இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையிலும் 2014 சனவரி மாதம் 27 ஆம் திகதிய 1847/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டதும் 2014.06.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2014 யூன் 18, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2671/ ’12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவ படகுத்துறைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி படகுத்துறைகளைத் தழுவியதாக மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) 2006 தொடக்கம் 2012 வரை நன்னீர் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்காக வருடாந்தம் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத்தொகை ஒவ்வொரு வருடத்திலும் கடற்றொழில் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத்தொகையில் வெவ்வேறாக எத்தனை சதவீதம் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறிய கால எல்லையினுள் நன்னீர் மீன்பிடித்துறைக்காக போதுமானளவு பணம் ஒதுக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீன்பிடித்தொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்கும் வேலைத் திட்டமொன்று நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறெனின், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) அந்த வேலைத்திட்டம் நன்னீர் மீன்பிடித்தொழிலாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யப் போதுமானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2014 யூலை 08, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2662/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஏற்றுமதிப் பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்காக தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள "விவசாய ஏற்றுமதி வலயங்கள்" நாடு பூராவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில் மேற்படி "விவசாய ஏற்றுமதி வலயங்கள்" நாடு பூராவும் விஸ்தரிக்கப்படுதல் சம்பந்தமான விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3233/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரைக்குமான இலாபம் அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்கான எதிர்பார்க்கப்படும் இலாபம் அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) நிறுவனத்தில் தொழில் புரியும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அது மிகை ஊழியர்களை கொண்டுள்ளதா அல்லது குறைவான ஊழியர்களை கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஒரு ஊழியருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுங்கால, நடுத்தர மற்றும் நீண்டகால கடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3448/ '13

கௌரவ பி. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கமைய பாடப் பணிப்பாளர் பதவிக்காக பூர்த்திசெய்திருக்கவேண்டிய குறைந்தபட்ச தகைமைகள் யாவை;

(ii) வடமத்திய மாகாணத்தின் கல்வித் திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற பாடப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி பணிப்பாளர்களில் இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் II மற்றும் III ஐச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் இவர்களின் பெயர்கள் மேற்படி தரங்களுக்கிணங்க தனித்தனியாக யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு பாடப் பணிப்பாளருக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள பாடம் மற்றும் கடமைப் பணிகள் யாவை;

(v) மேற்படி பாடப் பணிப்பாளர்களில் கௌரவ சேவையில் ஈடுபட்டுள்ளோர் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை கல்வி நிருவாகச் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவ்வுத்தியோகத்தர்கள் மேலே குறிப்பிட்ட பாடப் பணிப்பாளர் பதவிகளுக்கு நியமிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(iii) மேற்படி பணிப்பாளர்களின் மேலதிகப் படிகளும் கொடுப்பனவுகளும் மாகாண சபையினால் மேற்கொள்ளப்படுகின்றனவா, இன்றேல் மத்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றனவா;

(iv) கல்விச் சேவைகள் ஆணைக்குழுவினால் வடமத்திய மாகாண கல்வி அமைச்சுக்காக அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்குப் புறம்பாக பாடப் பணிப்பாளர்களின் ஆட்சேர்ப்புக்காக விசேட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3626/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் புதிதாக இடப்பட்ட"சன்விச்" ஓட்டப் பாதையை திருத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விடயத்தை ஆராய்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டதா;

(ii) அவ்வாறெனின், அக் குழுவின் உறுப்பினர்கள் யார்;

(iii) மேற்படி குழு நியமிக்கப்பட்ட திகதி யாது;

(iv) மேற்படி குழுவின் சிபாரிசுகள் யாவை;

(v) மேலே குறிப்பிடப்பட்ட ஓட்டப் பாதையின் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்ட கம்பனி அல்லது நபர்கள் யாவர்;

(vi) இதன் நிர்மாணப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்காக சனாதிபதி புலனாய்வுப் பிரிவினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3689/ ’13

கௌரவ அனுர திஸாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குழுவினர்கள் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத, பகுதியளவில் பயிற்றப்பட்ட நடுத்தர மட்டம், எழுதுவினைஞர், விமானப் பணிப்பெண் மற்றும் வேறு எனும் வகைப்படுத்தலின் கீழ் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) வெளிநாடு சென்றுள்ள மேற்படி குழுவினரில் உள்ளடங்கும் பெண்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி (ii) இல் ஒவ்வொரு வகையின் கீழ் வரும் பெண்களின் எண்ணிக்கை, குறித்த ஆண்டில் வெளிநாடு சென்றுள்ள பெண் ஊழியர்களின் எண்ணிக்கையின் சதவீதமாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3738/ ’13

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திக்வெல்ல பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகள் மீட்கப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டுவதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்படி பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் அனுமதியின்றி மீட்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற காணி மீட்புகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை திக்வெல்ல பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகளை மீட்பதற்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மீட்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வயற் காணிகளை மீட்பதற்கு அனுமதி வழங்கியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3823/ '13

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள சிறுநீரக நோயாளர்களின் குருதி மாற்றீடு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த வைத்தியசாலைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் உள்ள குருதி மாற்றீடு இயந்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் ஒரு நாளில் குருதி மாற்றீட்டுக்கு உட்படுத்தப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) சிறுநீரக நோயாளர்களின் குருதி மாற்றீடு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள் மற்றும் தாதிமார் பதவியணியினர் மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள சுகாதார சேவைகள் அலுவலகங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த அலுவலகங்கள் ஊடாக இதுவரை இனங்காணப்பட்டுள்ள சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அநுராதபுர பொது வைத்தியசாலையில் சிறுநீரகப் பதியம் மேற்கொள்ளப் படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், அந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iii) சிறுநீரகப் பதியம் தற்போது இடம் பெறாவிடின் அதற்கான அசௌகரியங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

4227/ '13

கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு முதல் இன்று வரை மக்கள் வாக்குகளின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதேச சபை பிரதிநிதிகள், நகர சபை பிரதிநிதிகள் மற்றும் மாகாண சபை பிரதிநிதிகளில் தற்போது, ஊழல், குற்றச்செயல் அல்லது வேறு சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டமை காரணமாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், உரித்தான அரசியல் கட்சிகள் மற்றும் இவர்கள் மாகாண சபையில், நகர சபையில் மற்றும் பிரதேச சபையில் வகித்த அல்லது தற்போது வகித்துவருகின்ற பதவிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட மக்கள் பிரதிநிதிகளில் தற்போது சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) தற்போது சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு குற்றவாளிகளாக்கப்பட்டு தண்டனை பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்டவாறு ஊழல் பேர்வழிகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதன் காரணமாக திட்டமிடப்பட்ட ஊழல்கள், குற்றச் செயல்கள் மற்றும் பலதரப்பட்ட சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கு ஏதுவாயமைகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஊழல் பேர்வழிகள் மற்றும் குற்றவாளிகள் பிரதேச மற்றும் மாகாண சபை அரசியலில் பிரவேசிப்பதை தடுப்பதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4560/ '13

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மௌலவி ஆசிரியர்கள் 424 பேரை ஆட்சேர்ப்பதற்காக 2008.08.29 ஆம் திகதிய 1565 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன என்பதையும்;

(ii) மேற்படி போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் 148 பேருக்கு 2010 ஆம் ஆண்டில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி போட்டிப் பரீட்சையில் போதியளவு புள்ளிகளைப் பெற்று நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய 276 விண்ணப்பதாரிகளுக்கு இற்றைவரை மௌலவி ஆசிரியர் பதவிகள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அந்த விண்ணப்பதாரிகளுக்கும் தாமதிக்காது மௌலவி ஆசிரியர் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4568/ '13

கௌரவ துனேஷ் கன்கந்த,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாடு சென்றுள்ள இலங்கை ஊழியர்கள் மிகக்கூடுதலான வெளிநாட்டுச் செலாவணியை இலங்கைக்கு ஈட்டித்தரும் பத்து மத்திய கிழக்கு நாடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நாட்டிலும் சேவையாற்றும் இலங்கையர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாட்டிலும் இலங்கைத் தூதரகங்கள் அமைந்துள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு தூதரகத்திலும் சேவையாற்றுகின்ற மொழிபெயர்ப்பு அலுவலர்களினதும் தொழில் அலுவலர்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நாடுகளில் சேவையாற்றுகின்ற இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கைக்கு ஒப்பீட்டளவில் போதியளவு பணியாட்டொகுதியினர் தூதரகங்களில் சேவையில் அமர்த்தப்படவில்லை என்பதை எற்றுக் கொள்கின்றாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கை ஊழியர்கள் மேற்படி நாடுகளில் பொலிசாரால் கைது செய்யப்படும் பட்சத்தில் உடனேயே அது தொடர்பாக இலங்கை தூதரகங்களுக்கு அறிவிப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கைக்கும் மேற்படி நாடுகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கைகளை ஏற்படுத்தி அவ்வாறான முறையியலொன்றை வகுப்பதன் மூலம் சட்டப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற இலங்கை ஊழியர்களுக்கு தூதரகங்களின் ஆதரவைப் பெறுவதற்கு வாய்ப்புக் கிடைக்குமென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4628/ ' 13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்பொது வாழ்க்கைச் செலவுப்படி எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) வாழ்க்கைச் செலவுப்படியின் அலகுப் பெறுமதி (அலகொன்றின் பெறுமதி ரூபாய்களில்) எவ்வாறு கணக்கிடப்படுகின்றது என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட விடயம் (அலகுப் பெறுமதி) இறுதியாக வர்த்தமானி மூலம் எப்போது வெளியிடப்பட்டது என்பதையும்;

(iv) இறுதியாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்குப் பின்னர், குறிப்பிட்ட அலகுப் பெறுமதியைத் திருத்தியமைக்க ஏதேனும் காரணங்கள் இருந்தனவா என்பதையும் மற்றும்

(v) அவ்வாறாயின், புதிய வாழ்க்கைச் செலவுப்படி அலகுப் பெறுமதியை அறிமுகம் செய்வதற்கு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான அறிவுறுத்தல்கள் எப்போது வழங்கப்படும் என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4662/ '13

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு சனவரி முதல் செப்டம்பர் வரை மதுவரித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட மதுபான உரிமங்களின் எண்ணிக்கையினையும்;

(ii) ஆண்டடிப்படையில், 2008 ஆம் ஆண்டு சனவரியிலிருந்து 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் வரையான காலப்பகுதியில் மதுபான உரிமம் வழங்கப்பட்டுள்ள கம்பனிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த மதுபான வரியையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மதுபான உரிமம் வழங்கப்பட்ட ஏதாவது கம்பனிகள் மதுபான வரி செலுத்துவதிலிருந்து தவறியுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவ்வாறு செலுத்தத் தவறிய கம்பனிகளின் பெயர்களையும்;

(iii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கம்பனியும் செலுத்த வேண்டிய மதுபான வரி நிலுவையின் மொத்தத் தொகையையும்;

(iv) மதுவரித் திணைக்களம் அவ்வாறு குறிப்பிட்ட ஏதேனும் கம்பனிக்கு உரிமத்தைப் புதுப்பித்துள்ளதா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அத்தகைய கம்பனிகளின் பெயர்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4804/ '14

கௌரவ அப்துல் ஹலீம்,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் அக்குரணை பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களில் 70% தமிழ் மொழி பேசுவோர் என்பதையும்;

(ii) அக்குரணை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறைவேற்று உத்தியோகத்தர்களில் அநேகமானோர் தமிழ் மொழியில் கடமையாற்ற இயலாதவர்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது அக்குரணை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் தமிழ் மொழியில் கடமையாற்ற இயலுமான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பிரதேச செயலகத்துக்கு தமிழ் மொழியில் கடமையாற்ற இயலுமான பிரதேச செயலாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4806/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஸ்கெலியா பிரதேசத்திலுள்ள சுமார் 56 தோட்டங்களில் வளர்க்கப்படும் மாடுகளுக்கு மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக விலங்கு மருத்துவர் ஒருவர் இல்லையென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மஸ்கெலியா விலங்கு மருத்துவ அலுவலகத்திற்கு நிரந்தரமான விலங்கு மருத்துவர் ஒருவரையும், உதவி விலங்கு மருத்துவர் ஒருவரையும் நியமிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4815/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காணாமல் போயுள்ள வாகன வருமான உரிமப்பத்திரத்திற்குப் பதிலாக ஒரு பிரதியை பெற்றுக் கொள்ளும் போது மேற்படி உரிமப்பத்திரம் காணாமல் போன திகதி முதல் முன்னோக்கியுள்ள காலத்திற்காக முழு உரிமப்பத்திரக் கட்டணமும் உரிமப்பத்திர உரிமையாளரிடமிருந்து மீண்டும் அறவிடப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) குறித்த ஆண்டுக்கான வருமான உரிமப்பத்திரத்துக்கான கட்டணம் செலுத்தப்பட்டு அரச வருமானத்தில் வரவுவைக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த உரிமப் பத்திரத்தின் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக மீண்டும் முழு உரிமப் பத்திரக் கட்டணத்தையும் அறவிடுவதற்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சாதாரண கடுதாசியில் அச்சிடப்பட்டுள்ள வாகன வருமான உரிமப்பத்திரம் அழிவடைவதற்கு அல்லது காணாமல் போவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) எனவே, மேற்படி உரிமப்பத்திரத்தின் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்ளும் போது அதற்குச் செலவாகும் செலவினத்தை மாத்திரம் அறவிட்டு அதனை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2014 யூலை 09, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2664/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு சமய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அநுராதபுரம், பொலன்னறுவை, கதிர்காமம், மன்னார் மடு தேவாலயம் போன்ற பிரதேசங்களில் ஊனமுற்ற படை வீரர்களுக்கான நவீன ஓய்வு விடுதிகளை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இந்த ஓய்வு விடுதித் தொகுதியை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3242/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கடற்றொழில், நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டு முதல் இற்றை வரையான இலாபத்தை அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் இலாபத்தை அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அது மிகை ஊழியர்களைக் கொண்டுள்ளதா அல்லது குறை ஊழியர்களைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலப் படுகடன், நடுத்தர மற்றும் நீண்டகாலப் படுகடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3449/ '13

கௌரவ பி. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அதிபர்களையும் இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களையும் ஆட்சேர்ப்பதற்கான அதிகாரம் மத்திய அரசாங்கத்தின் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரித்தானதா;

(ii) வடமத்திய மாகாணசபையின் அமைச்சரவையினால் அத் தத்துவங்களை மீறி மாகாண கல்விச் சேவைக்கான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான தத்துவம் மேற்படி மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ளதா;

(iii) இன்றேல், வடமத்திய மாகாண கல்வி அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள ஆசிரியர் சேவையின் உத்தியோகத்தர்கள் பாடப் பணிப்பாளர் பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்பட்டுள்ள நடைமுறை யாது;

(iv) மாகாண சபையினால் மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரமின்றி ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பிரயாணச் செலவுகளும் மேலதிகப் படிகளும் செலுத்தப்படுகின்ற விதம் யாது;

(v) மேற்படி கொடுப்பனவுகள் வடமத்திய மாகாணத்தின் எச் செலவுத் தலைப்பின் கீழ் செலுத்தப்படுகின்றன;

(vi) அவ்வுத்தியோகத்தர்களுக்கு பணம் செலுத்துதல் மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றதா;

(vii) மேற்படி பணம் செலுத்தப்படுகையில் அரசாங்கப் பணம் முறைசாரா வகையில் கையாளப்பட்டிருப்பின் அவ்வாறு செய்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3704/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை - பெலியத்தை புகையிரதப் பாதையொன்றை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நீளம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி புகையிரதப் பாதையை நிர்மாணிப்பது தொடர்பாக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்காக செலவிடும் ஒட்டுமொத்தச் செலவினம் எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி செலவினத்தைப் பெற்றுக் கொள்ளும் முறை யாது என்பதையும்;

(vi) மேற்படி செலவினம், கடன் மூலம் பெற்றுக் கொள்ளப்படுமாயின், கடன் பெற்றுக் கொள்ளப்படும் நிறுவனம் யாது என்பதையும்;

(vii) மேற்படி கடனுக்காக செலுத்த வேண்டிய வட்டி வீதம் மற்றும் அது தொடர்பான நிபந்தனைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பெலியத்தை - மாத்தறை புகையிரதப் பாதையின் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனம் யாது என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தை தெரிவு செய்கின்றபோது முறைசார்ந்த கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3739/ '13

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிட்டபெத்தர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகள் மீட்கப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டுவதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்படி பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் அனுமதியின்றி மீட்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற காணி மீட்புகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை பிட்டபெத்தர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகளை மீட்பதற்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மீட்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வயற் காணிகளை மீட்பதற்கு அனுமதி வழங்கியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3908/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தின் ஜா-எல நகரை அடுத்துள்ள தண்டுகம பிரதேசத்தில் கொண்டு நடத்தப்படும் விலங்குச் சாலைகளினதும் விலங்குகளை அறுக்கும் இடங்களினதும் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பிரதேசத்தில் நிதமும் குவிக்கப்படும் உயிர் கழிவுகளை அப்புறப்படுத்துவது தொடர்பில் நடைமுறையில் உள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கழிவுகள் தொடர்பில் ஏதேனும் சுற்றாடல் மற்றும் சுகாதார பேணல் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிபாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4320/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் இறுதியளவில் நாட்டின் நெற் களஞ்சியசாலைகளில் காணப்பட்ட கையிருப்புத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நெற் கையிருப்பு கடந்த பெரும் போகத்தில் கொள்வனவு செய்யப்பட்டவையா என்பதையும்;

(iii) இன்றேல், இதனை விட பழைய நெற் கையிருப்பு மேற்படி களஞ்சியசாலைகளில் காணப்பட்டனவா என்பதையும்;

(iv) மேற்படி நெற் கையிருப்பை மக்களின் நுகர்விற்காக விநியோகிக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2013 ஆம் ஆண்டின் சிறு போகத்தில் எதிர்பார்க்கப்பட்ட நெல் அறுவடை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி அறுவடையை கொள்வனவு செய்வதற்கும் களஞ்சியப்படுத்துவதற்கும் திட்டமிட்டிருந்ததா என்பதையும்;

(iii) அந் நிகழ்ச்சித் திட்டம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

4416/ '13

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திலிருந்து அநுராதபுரம் வரை மின்சாரத்தை கடத்துகின்ற 220 கிலோ வொட் உச்ச கடத்து பாதை நிர்மாணிக்கப்பட்டமை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு குடும்பத்திற்கும் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறு செலுத்தப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகைகளின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி மின் கடத்து பாதையை நிர்மாணிக்கும் போது இதுவரை நட்டஈடு கிடைக்காதுள்ள இடம்பெயர்ந்தவர்கள் உள்ளார்களா என்பதையும்;

(v) இவர்களுக்கு நட்டஈடு செலுத்துதல் தாமதமடைந்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி கருத்திட்டம் தொடர்பாக செலுத்த வேண்டிய சகல நட்டஈட்டுத் தொகைகளையும் செலுத்தி முடிக்க எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4664/ '13

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச வைத்தியசாலைக்காக மருந்துகளை இறக்குமதி செய்வதற்கும் கொள்வனவு செய்வதற்கும் பொறுப்பான அமைப்பையும்/அமைப்புக்களையும்;

(ii) அரச வைத்தியசாலைகளுக்கு மருந்துகளை விநியோகம் செய்வதற்கு பொறுப்பான அமைப்பினையும்

அவர் இச் சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) அரச வைத்தியசாலைகளில் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மருந்துத் தட்டுப்பாடு நிலவியதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்குறிப்பிட்ட வருடங்களில் மருந்துத் தட்டுப்பாடு இருப்பதாக அறிக்கையிடப்பட்ட அரச வைத்தியசாலைகளின் பெயர்களையும்;

(iii) மேற்குறிப்பிட்ட மருந்துத் தட்டுப்பாட்டிற்கான காரணங்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4740/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் தற்போது மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மூடப்பட்டுள்ள மேற்படி பாடசாலைக் கட்டடங்களிலிருந்து பயன் ஏதும் பெறப்படுகின்றதா என்பதையும்;

(iii) மீண்டும் ஆரம்பிக்கப்படாதுள்ள பாடசாலை கட்டடங்களை, தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு வழங்குவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4805/ '14

கௌரவ அப்துல் ஹலீம்,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தின் அக்குறனை பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்திற்குரிய 35 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் தமிழ் பேசும் பெரும்பான்மை மக்களுக்காக சேவையாற்றும் பொருட்டு தமிழ் மொழியில் கடமையாற்றக்கூடிய ஐந்து கிராம அலுவலர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட 35 கிராம அலுவலர் பிரிவுகளில் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 21 கிராம அலுவலர் பிரிவுகளுக்கென தமிழ் மொழி பேசக்கூடிய கிராம அலுவலர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4807/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உக்குவெல நகரம் மற்றும் சுற்றிலுமுள்ள பகுதிகளில் வாழும் தமிழ் பிள்ளைகளுக்கு உயர் தரம் வரை கல்வி கற்பதற்கான தமிழ் மொழிமூல பாடசாலையொன்று இல்லை என்பதையும்;

(ii) அண்ணளவாக 700 இற்கும் மேற்பட்ட தமிழ் மாணவ மாணவிகள் கல்வி கற்கக் கூடிய பாடசாலையொன்றை அமைக்கத் தேவையான காணியை வழங்க பெற்றோர் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) உக்குவெல நகரம் மற்றும் அதையண்டிய தோட்டப் பிரதேசங்களில் வாழும் தமிழ் பிள்ளைகளின் கல்வி நலனுக்காக தமிழ் மொழிமூல பாடசாலை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4867/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— பிரதம அமைச்சரும், புத்தசாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.02.19ஆந் திகதி இலங்கை பொலிஸின் உயர் அதிகாரிகளுக்கு மோட்டார் வாகனங்கள் வழங்கப்பட்டதா;

(ii) அவ்வாறெனில், அந்த வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) அதற்காக எவ்வளவு பணம் செலவிடப்பட்டது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2666/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நாடு பூராவும் பரவியுள்ள முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கும் சாரதிகளுக்கும் சமூக காப்புறுதித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறு சமூக காப்புறுதித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப் பட்டிருப்பின், மேற்படி காப்புறுதித் திட்டம் சம்பந்தமான விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3243/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைத் தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஸ்ரீ லங்கா ரெலிகொம் லிமிரெட் தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டு முதல் இற்றை வரையான இலாபத்தை அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் இலாபத்தை அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அது மிகை ஊழியர்களைக் கொண்டுள்ளதா அல்லது குறை ஊழியர்களைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலப் படுகடன், நடுத்தர மற்றும் நீண்டகாலப் படுகடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2014 யூலை 10, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2667/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது குடும்ப சுகாதாரத் துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள குடும்ப சுகாதார சேவை பெண் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குடும்ப சுகாதார சேவை பெண் உத்தியோகத்தர்கள் சேவையை வழங்குவதற்குப் போதியளவு வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3244/ ’12

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைப் போக்குவரத்துச் சபை தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டு முதல் இற்றை வரையான இலாபத்தை அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் இலாபத்தை அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அது மிகை ஊழியர்களைக் கொண்டுள்ளதா அல்லது குறை ஊழியர்களைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலப் படுகடன், நடுத்தர மற்றும் நீண்டகாலப் படுகடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3710/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் சனாதிபதியவர்களின் உத்தியோகபூர்வ பணியாட்டொகுதிக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இன்றைய சனாதிபதியவர்களின் உத்தியோகபூர்வ பணியாட்டொகுதியில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணியாட்டொகுதிக்குரிய ஒவ்வொரு பதவி மற்றும் அதற்குரிய பொறுப்புகள் தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மேற்படி பதவிகளை வகிக்கும் ஒவ்வொருவரினதும் பெயர், கல்வித் தகைமைகள், வேறு தகைமைள் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) மேற்படி பணியாட்டொகுதியினருக்காக செலுத்தப்படும் சம்பளம், ஏனைய அனைத்து வசதிகள் மற்றும் கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(vi) இதற்கமைய சனாதிபதியவர்களின் பணியாட்டொகுதியினருக்காக கடந்த 3 வருடங்களினுள் ஏற்கப்பட்ட செலவினங்கள் எவ்வளவென்பதையும்;

(vii) மேற்படி செலவினங்களுடன் ஒப்பிடுகையில் மேற்படி பணியாட்தொகுதியினர் திருப்தியடைக்கூடிய விதத்தில் போதியளவு கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுகின்றார்களா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3740/ '13

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொட்டபொல பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகள் மீட்கப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டுவதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்படி பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் அனுமதியின்றி மீட்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற காணி மீட்புகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை கொட்டபொல பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகளை மீட்பதற்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மீட்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வயற் காணிகளை மீட்பதற்கு அனுமதி வழங்கியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3745/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தற்போது அரச சேவையில் உள்ள,

(i) மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி எண்ணிக்கையில் பெண் ஊழியர்களின் சதவீதம்;

(iii) அமைச்சுச் செயலாளர்களின் எண்ணிக்கை;

(iv) அமைச்சுச் செயலாளர் பதவி வகிக்கும் பெண்களின் எண்ணிக்கை;

(v) அமைச்சு செயலாளர் பதவி வகிக்காத இலங்கை நிருவாகச் சேவை அலுவலர்களின் எண்ணிக்கை;

(vi) மேற்படி அ(v) இன் அலுவலர்களிடையே உள்ள பெண் ஊழியர்களின் எண்ணிக்கை;

(vii) ஒவ்வொரு தர மட்டத்திலும் உள்ள மேற்படி பெண் ஊழியர்களின் சதவீதம்

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3828/ '13

கௌரவ பி. ஹரிசன்,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் மதுபான விற்பனைக்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி மதுபான உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை விற்பனை நிலையங்கள், ஹோட்டல்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வருடாந்தம் புதிதாக வழங்கப்பட்டுள்ள மதுபான உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் புட்சிட்டி வர்த்தக நிலையம், கூ.மொ.வி. நிலையங்கள் ஹோட்டல்கள் மற்றும் ஏனைய விற்பனை நிலையங்களுக்கு புதிதாக வழங்கப்பட்டுள்ள மதுபான உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தற்போது வழங்கப்பட்டுள்ள மதுபான விற்பனை உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை மாவட்டங்களுக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி உரிமப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் வருமானம் மாவட்டங்களுக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) வெளிநாட்டு மதுபான வகைகள் விற்பனை உரிமப்பத்திரம் வழங்கப்படுவதானது, கிராமப்புற கள்ளச்சாராய (கசிப்பு) பாவனை குறைவடைவதற்கு ஏதுவாகியுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

3924/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தில் பார்ஜ் (சுமைப்படகு) ஒன்று உள்ளதா;

(ii) அங்கு கொள்கலன்களைக் கையாள்வதற்காக பொருத்தப்பட்டுள்ள பாரந்தூக்கிகளின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வேறு பயணமுடிவிடங்களை நோக்கிச் செல்கின்ற வேளையில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக மாத்திரம் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு இற்றைவரை வருகை தந்துள்ள கப்பல்களின் எண்ணிக்கை யாது;

(ii) இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவரால் குறிப்பிடப்படுகின்றவாறு அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஏறக்குறைய 5000 நிரந்தர ஊழியர்கள் சேவையாற்றுகின்றார்களா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4332/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இந்நாட்டில் இயங்கி வருகின்ற கல்வியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்திற்கும் அமைய தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டில் ஒவ்வொரு கல்வியியல் கல்லூரியிலும் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கல்வியியல் கல்லூரிகளில் சேவையாற்றுகின்ற பீடாதிபதிகளின் பெயர்கள் மற்றும் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) கல்வியியல் கல்லூரி பீடாதிபதிப் பதவியை வகிப்பதற்கு இருக்க வேண்டிய குறைந்தபட்ச தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கல்வியியல் கல்லூரிகளில் விரிவுரையாளர் பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், விரிவுரையாளர் பற்றாக்குறை காணப்படும் கல்வியியல் கல்லூரிகள் மற்றும் பாடங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4753/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) தற்போது மேற்படி கருத்திட்டத்தின் வேலைகள் முடிவடைந்துள்ளனவா என்பதையும்;

(iii) 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காலி துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான மதியுரைக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) காலி துறைமுகம் தொடந்தும் நட்டத்தில் இயங்கிவருகின்றதென்பதை அறிவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4808/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தின் பெரியமடு கமத்தொழில் கிராமத்தில் வாழை, தெங்கு மற்றும் இதர பயிர்ச் செய்கைகளுக்கு காட்டு யானைகளின் தாக்குதல் காரணமாக சேதம் ஏற்படுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி கிராம மக்கள் காட்டு யானை தாக்குதல்கள் காரணமாக அச்சத்துடன் வாழ்கின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) பெரியமடு கிராம மக்களுக்கு காட்டு யானைகளின் தாக்குதல்கள் காரணமாக எதிர்கொள்ள நேரிட்டுள்ள பயங்கர நிலைமையை போக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4868/ '14

கௌரவ அஜித் மானப்பெரும,— பிரதம அமைச்சரும், புத்தசாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பஸ் வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(iii) தற்போது அந்த பஸ் வண்டிகள் உள்ள இடங்கள் யாவை;

(iv) அந்த பஸ் வண்டிகளை பராமரிப்பதற்கு மாதாந்தம் அரசாங்கம் செலவிடுகின்ற பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து பஸ் வண்டிகளும் தற்போது அரசாங்கத்தின் வசம் உள்ளதா;

(ii) இன்றேல் அந்த பஸ் வண்டிகள் விற்பனை செய்யப்பட்டனவா;

(iii) அவ்வாறெனின் அந்த பஸ் வண்டிகளின் விற்பனை மூலம் பொதுத் திறைசேரிக்கு கிடைத்த பணத் தொகை எவ்வளவு;

(iv) அந்த பஸ் வண்டிகள் விற்பனையின் மூலம் பொதுத் திறைசேரி இழந்த பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2668/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு கிழக்கின் உதயத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட 2500 வீட்டுத் தோட்டங்கள் மற்றும் 19 பழ உற்பத்தி கிராமங்கள் ஆகியவற்றை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள வீட்டுத் தோட்டங்களினதும் பழ உற்பத்திக் கிராமங்களினதும் மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மஹிந்த சிந்தனைக்கேற்ப மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் தோட்டங்கள் மற்றும் பழ உற்பத்திக் கிராமங்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு ஏதேனும் புதிய வர்த்தக முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த முறையுடன் தொடர்புடைய விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3245/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தபால் திணைக்களம் தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்வுகூறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் எவ்வளவு என்பதையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியன எவ்வளவு என்பதையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலக்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3741/ '13

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் தற்போதுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் பணியாற்றும் மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆசிரியர்களில் 5-10 வருடங்கள், 11-15 வருடங்கள், 16-20 வருடங்கள், மற்றும் 21 வருடங்களுக்கு மேலதிகமாக தமது சேவைக்காலத்தை அதே பாடசாலையில் பூர்த்திசெய்துள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடசாலைக்கேற்பவும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தின் ஒவ்வொரு தேசிய பாடசாலையிலும் நீண்டகாலமாக சேவையாற்றும் பெருமளவு ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(ii) இந்த ஆசிரியர்கள் ஒரே பாடசாலையில் நிலைகொண்டிருப்பதற்கான காரணம் யாது;

(iii) மேற்படி ஆசிரியர்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை துரிதமாக தயாரிப்பாரா;

(iv) ஆமெனில், அத் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4174/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 யூலை மாத இறுதியளவில் அரச பல்கலைக்கழகங்களில் சேவையில் ஈடுபட்டிருந்த ஒவ்வொரு கல்விசாரா பதவியணியையும் சேர்ந்த ஊழியர் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) பல்கலைக்கழக கல்விசாரா பதவியணி ஊழியர்களின் ஆட்சேர்ப்புடன் தொடர்புடைய ஆகக்குறைந்த சம்பள அளவு யாது;

(iii) மேற்படி கல்விசாரா ஊழியர்களின் சம்பள ஏற்றங்கள் அமைந்துள்ள விதம் யாது;

(iv) கல்விசாரா ஊழியர்களின் பல்வேறு சம்பளப் படிநிலைகளுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் யாவை;

(v) தற்போது கல்விசாரா பதவியணிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2014 யூலை 11, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2665/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பன்சாலைகள், கோவில்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் உள்ளிட்ட சமய வணக்கஸ்தலங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக தயாரிக்கப்ப்டுள்ள அரசாங்கத்தின் உதவித் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி உதவித்திட்டங்கள் சமபந்தமான விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

ஆ) இன்றேல், ஏன்?

3246/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைப் புகையிரதத் திணைக்களம் தொடர்பில்,

(i) 2012 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்வுகூறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் எவ்வளவு என்பதையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியன எவ்வளவு என்பதையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலக்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3268/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்தோறும் "சேவை இல்லம்" அலுவலகங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iii) "சேவை இல்லம்" அலுவலகமொன்றை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்ட பணத்தொகை யாது;

(iv) முதலாவது "சேவை இல்லம்" அலுவலகம் நிர்மாணிக்கப்படுவது எப்போது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3713/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சனாதிபதி நிதியத்திற்குக் கிடைத்துள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நிதி பெற்றுக் கொள்ளப்பட்ட முறை யாது என்பதையும்

வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சனாதிபதி நிதியத்தினால் கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் செலவிடப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) ஒவ்வொரு துறை ரீதியாக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சனாதிபதி நிதியத்தினால் மருத்துவ சிகிச்சைகளுக்கு உதவி வழங்குவதற்காக ஆட்களைத் தெரிவு செய்கின்ற அடிப்படை யாது என்பதையும்;

(ii) கடந்த 03 வருட காலப்பகுதிக்குள் பிரதேச சபைகள், மாகாண சபைகள் மற்றும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற உறுப்பினர்களுக்காக மருத்துவ சிகிச்சைகளுக்கு சனாதிபதி நிதியத்திலிருந்து உதவி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவர்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள பணத் தொகைகள் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3829/ '13

கௌரவ புத்திக பதிரன,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் வன ஒதுக்கம் மற்றும் கடற்படை வேலைத்தளம் அமைந்துள்ள சரணாலயத்தினுள் அனுமதியற்ற மற்றும் சட்ட விரோத 30 கல் உடைக்கும் தலங்கள் நடாத்தப்படுகின்றனவென்பதையும்;

(ii) தற்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய கல்மெட்டியாவ கிராம அலுவலர் பிரிவில் கந்தளாய் வன ஒதுக்கத்தினுள் அமைந்துள்ள பாரிய அளவிலான கல் உடைக்கும் தலத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இதற்கு அனுமதி வழங்குமாறு பிரதேசத்திலுள்ள பலம்பொருந்திய பெண் அரசியல்வாதியொருவர் அரச அலுவலர்களுக்கு பெரும் அழுத்தம் கொடுக்கின்றாரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தாவர, விலங்கின பாதுகாப்புச் சட்டத்தை மீறி, காடுகளை வெட்டித் துப்புரவு செய்து கல் உடைக்கும் தலங்களை நடாத்துவது சட்ட விரோதச் செயலாகவும் சுற்றாடலைப் பாதிக்கும் செயலாகவும் இருக்கின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இச்சட்ட விரோதச் செயல்களை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3925/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பெருந்தொகையான வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள் மூலமாக அதிக சம்பளம் கிடைக்கின்ற திட்டவட்டமான தொழில்களுக்காக ஆற்றுப்படுத்துவதாக கூறி வெளிநாட்டுக்கு அனுப்பிவைக்கப்படுகின்ற ஊழியர்கள் வெளிநாடுகளில் குறைந்த சம்பளம் பெறுகின்ற தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) போலியான தகவல்களை வழங்கி ஊழியர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கின்ற தொழில் முகவர்களுக்கு எதிராக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4444/'13

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த ஏழு வருட காலப்பகுதியினுள் இலங்கை மின்சார சபையில் சேவையாற்றுவதற்காக ஒப்பந்த அடிப்படையில் அல்லது அமைய ஊழியர் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களில் ஐந்து வருடங்களுக்கும் அதிக காலம் சேவையாற்றியுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி ஊழியர்களுக்காக செய்யப்படுகின்ற கொடுப்பனவுகள் தொழில் ஒழுங்குவிதிகளுக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வாறு செயற்பட ஆரம்பித்த திகதி யாது என்பதையும்;

(v) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையில் இலங்கை மின்சார சபையின் நிரந்தர சேவைக்காக ஆட்சேர்க்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) மேற்படி ஆட்சேர்ப்புக்கள் எந்த நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4475/ '13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மன்னார் மாவட்டத்தின் மொத்த நிலப் பரப்பிலும் கண்ணி வெடிகள் அல்லது வெடி பொருட்கள் அகற்றப்பட்டு பொது மக்கள் வாழ்வதற்குத் தேவையான சுற்றுச்சூழல் உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மன்னார் மாவட்டத்தின் மடு பிரதேச செயலாளர் பிரிவின் இரணை இலுப்பைக்குளம் பிரதேசத்தின் திருமதி எம்.கே. யஸவதிக்குச் சொந்தமான சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டதன் பின்னர் கண்ணி வெடிகளை அல்லது வெடி பொருட்களை அகற்றி துப்பரவு செய்து கொடுக்கப்படவில்லை என்பதையும்;

(ii) மேற்படி காரணத்தினால் சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்கள் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள முடியாது பெரும் சிரமத்துக்கு உள்ளாவதற்கு நேரிட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், மேலே குறிப்பிடப்பட்ட காணியின் உரிமையாளர்களுக்கு தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியவாறு மேற்படி விவசாய நிலங்களை துப்பரவு செய்து கொடுப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4754/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள தேங்காய் எண்ணெய்த் தொழில்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) தற்போது இயங்கிவரும் நிலையிலுள்ள மேற்படி தொழில்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) 2005 ஆம் ஆண்டில் குருநாகல் மாவட்டத்தில் இயங்கிவந்த தேங்காய் எண்ணெய்த் தொழில்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) குருநாகல் மாவட்டத்தில் தற்போது இயங்கிவரும் நிலையிலுள்ள தேங்காய் எண்ணெய்த் தொழில்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) குருநாகல் மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 80 தேங்காய் எண்ணெய்த் தொழில்சாலைகள் மூடப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4798/ '14

கௌரவ கயந்த கருணாதிலக்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மின்சார உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் அது செயலிழந்த தடவைகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செயலிழந்து காணப்பட்ட காலகட்டம் வெவ்வேறாக யாது;

(ii) இதுவரை அது செயலிழந்து காணப்பட்ட சந்தர்ப்பங்களில் அதனை திருத்துவதற்காக செலவான மொத்தப் பணத் தொகை எவ்வளவு;

(iii) மேற்படி திருத்தத்திற்காக செலவான பணத் தொகை மின் உற்பத்தி நிலையம் செயலிழந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவு;

(iv) மேற்படி செயலிழப்பானது ஏற்புடைய உபகரணங்களின் உத்தரவாத காலத்தினுள் இடம்பெற்றிருப்பின் மேலே குறிப்பிட்டவாறு பணம் செலவிடப்பட்டமைக்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட செயலிழப்பு காரணமாக மேற்படி காலகட்டங்களினுள் வேறு மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து தேசிய மின்சார முறைமைக்கு மின்சாரத்தை பெறுவதற்காக செலவிடப்பட்ட மேலதிகப் பணத் தொகை எவ்வளவு;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் செயலிழப்பு காரணமாக செலவான மேலதிகப் பணத் தொகையை கூட்டுகின்றபோது ஓர் அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2670/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கடல் மீன்பிடித்துறையை முன்னேற்றுவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தேசிய வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(ii) கடல் மீனவ சமுதாயத்திற்கு மீன்பிடி உபகரணங்களை வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி பணத்தொகையானத கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகையின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(vi) ஒதுக்கப்பட்டுள்ள மேற்படி பணத்தொகை போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3247/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குடிவரவு குடியகல்வு திணைக்களம் தொடர்பாக,

(i) 2012ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்வுகூறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் எவ்வளவு என்பதையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியன எவ்வளவு என்பதையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலக்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3330/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில்,

(i) கற்பழிப்பு தொடர்பில் குற்றவாளிகளானவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) பெண் கொலைகள் தொடர்பில் குற்றவாளிகளானவர்களின் எண்ணிக்கை என்பதையும்

வருடாந்தம் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட காலப்பகுதியில் கற்பழிப்பு மற்றும் பெண் கொலைகள் தொடர்பில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட அரசியலுடன் தொடர்புடைய நபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) இக்குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3720/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த ஐந்து வருடங்களில் இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட புகையிரத என்ஜின்கள் மற்றும் பெட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அவை கொள்வனவு செய்யப்பட்ட நாடு அல்லது நாடுகள் யாவை என்பதையும்;

(iii) கொள்வனவு செய்யும்போது பின்பற்றப்பட்ட நடைமுறைகள் யாவை என்பதையும்;

(iv) அவற்றைக் கொள்வனவு செய்வதற்காக நிதி பெற்றுக் கொள்ளப்பட்ட முறை யாது என்பதையும்;

(v) நிதி பெற்றுக் கொள்வதற்காக உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் கடன் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி கடனின் அளவு, வட்டி வீதங்கள் மற்றும் ஏற்புடைய நிபந்தனைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி என்ஜின் மற்றும் பெட்டிகளில் தேவையான தொழில்நுட்பங்கள் இல்லை என்பது தெரியவந்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி புகையிரதப் பெட்டிகள் மற்றும் என்ஜின்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பாக விசாரணையொன்று நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி விசாரணைக்கமைய குறித்த கொள்வனவு தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

(v) இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3830/ '13

கௌரவ புத்திக பதிரண,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹக்மன - மாத்தறை வீதியை விஸ்தரித்து 'கார்பட்' இடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ப்படுகின்றதா என்பதையும்;

(ii) இவ்வீதியை விஸ்தரித்து அபிவிருத்தி செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iii) இதற்கென நிதியைப் பெற்றுக்கொள்ளும் மூலங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வீதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மாத்தறை - ஹக்மன வீதி, கொடகம - பெலிஅத்த கடுகதி நெடுஞ்சாலைக்கான நுழைவாயிலெனக் கூறி விஸ்தரிக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) இவ்வீதி விஸ்தரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுமாயின், இதைவிட அதிக பிரதேசங்களை உள்ளடக்கும் கொடகம - அகுரஸ்ஸ வீதியை அபிவிருத்தி செய்யாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இற்றைக்கு 7 - 8 வருடங்களுக்கு முன்பு 'கார்பட்' இடப்பட்ட இவ்வீதியை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உயர் உத்தியோகத்தர்களின் பிழையான அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) 'கார்பட்' இடப்பட்ட வீதிக்கு மீண்டும் கார்பட் இடுவதற்கு நடவடிக்கை எடுத்தலானது நிதி விரயம் செய்தலாகுமல்லவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.18/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்றை உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு "விசேட வழக்குத் தொடுநர்" எனப்படும் பதவியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.20/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வூதிய பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றிராத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கையாக்கச் சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலைசெய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்பாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்து வதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.31/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்கள் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர் களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.33/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளுக்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசாங்க தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதல்,— அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைத்து அரசாங்க தகவல்களையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காகவும் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.45/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்குதல்,— மக்களில் அதிகமானோர் இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை உடையவர்களாய் இருப்பதால் இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்க வேண்டியிருப்பதாலும் அதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக இலவசமாக வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க ஊழியர்கள் அல்லது தொழிலற்றோருக்கு அதற்கான முழு செலவையும் அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தினூடாக வழங்குதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.46/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலக சுற்றாடலை பாதுகாத்தல்,— இலங்கை உலக சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு புவி வெப்பமாதலை தவிர்ப்பதற்காக குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.47/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புதல்,— தொலைக்காட்சி அல்லது இணையம் மூலமாக பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடியாக அல்லது தணிக்கை செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.48/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்குதல்,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர் களுக்கு எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.49/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையினை அறிமுகப்படுத்துதல்,— தற்போதுள்ள பழைமையான வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.57/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேருநர் இடாப்பை அடிக்கடி இற்றைப்படுத்துதல்,— தேருநர் இடாப்பு வருடத்தில் மாதமொன்றுக்கு முப்பது நாட்களுக்கு மட்டும் இற்றைப்படுத்தும் பட்டியலொன்றாக அல்லாமல் அது அடிக்கடி இற்றைப்படுத்தும் திறந்த பட்டியலொன்றாக இருத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.59/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்,— வெளிநாடுகளுக்குச் சென்று மிகவும் சிரமத்திற்கு மத்தியில் உழைக்கும் செல்வத்தை, இலங்கையின் செல்வத்தை அதிகரிப்பதற்காக அனுப்புகின்ற, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களை மதிக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டுமேன இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.60/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்காக ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல், — பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றதனால் ஆயுதப் படைகளில் 22 வருடங்கள் பூர்த்தி செய்யாத போதிலும் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.62/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலது குறைந்ததும் நடமாடமுடியாததுமான நபர்களுக்கு விசேட வடிவங்களை அறிமுகப்படுத்துதல்,— சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு வலது குறைந்தோரின் வசதிகளை உறுதிப்படுத்தவும் அவர்களிடமுள்ள வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அவர்கள் தேவையற்ற விதத்தில் பிறர்மீது தங்கிருப்பதைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்தின் அனைத்து புதிய கட்டிடங்கங்களிலும் விசேட வடிவமொன்றை அமைக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.63/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தல், – பதிவுசெய்திருந்தும் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்காத வாக்காளர் அநேக எண்ணிக்கையானோர் இருப்பதனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வாக்களிக்காத நபர்களிடமிருந்து தண்டப் பணமொன்றை அறவிவிடுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.64/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழலற்ற உலகொன்றை உறுதிப்படுத்தல்,— ஊழலை முற்றாக ஒழிப்பதற்காக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உலகிலுள்ள பாராளுமன்ற அமைப்புக்களில் சேர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 80/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாய்கள், பூனைகள் போன்ற செல்லப் பிராணிகளை வளர்த்தல் தொடர்பான சட்டங்களை வகுத்தல்,— வீடுகளில் அல்லது விற்பனை செய்வதற்காக வளர்க்கப்படும் நாய்கள், பூனைகள் போன்ற செல்லப்பிராணிகளை உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவு செய்யத் தேவையான சட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்பதோடு, குறித்த பிராணிகளின் குட்டிகளை, சட்டரீதியான அனுமதி பெற்ற நிலையங்களில் மாத்திரம் விற்பனை செய்தல் வேண்டுமெனவும் அவ்வாறல்லாத இடங்களில் வளர்க்கப்படும் பெண்ணினப் பிராணிகளை கட்டாயமாக மலடாக்கலுக்கு உட்படுத்துவதற்கும், தேவையான சட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 81/ '10

கௌரவ புத்திக பதிரண,— தொழில் சந்தைக்குத் தேவையான ஊழியர்களை பயிற்றுவித்தல்,— எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகும் புதிய தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் வழியொன்றைத் தொடங்கி வைக்கும் பணியை மிகவும் வினைத்திறனான வகையில், நாட்டினுள் காணப்படும் அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களினூடாக ஆரம்பித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/ '10

கௌரவ புத்திக பதிரண,— பொதுநிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்,— தற்சமயம் பொதுநிர்வாக அமைச்சினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக புதிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச எல்லைகளையும் புதிய மாவட்ட எல்லைகளையும் நிர்ணயிக்க வேண்டுமெனவும், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அத்தகைய ஆளுகைப் பிரதேசத்தினுள் கோட்டக் கல்வி அதிகாரப் பிரதேசம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசம், பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர் அதிகாரப் பிரசேதம் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரப் பிரதேச எல்லைகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்தமான பொதுத்துறைக் கட்டமைப்பும் திருத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/ '10

கௌரவ புத்திக பதிரண,— நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பித்தல்,— மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கை திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் முடங்கியிருப்பதால் அப்பள்ளத்தாக்கின் ஊட்டப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்களின் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துக்குப் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குதல்,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்ற, சமாதான நீதவான் பதவியானது, அவர்களது பதவிக் காலத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவிக்காலத்தின் பின்னரும், அவர்களிடம் மேற்படி சேவையினைப் பெறுவதற்காக வரும் அநேகமானோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதாலும், இம் மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது பதவிக் காலத்தின் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குவதற்கான தகுந்ததொரு வேலைத் திட்டத்தினை வகுத்தல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 85/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் குறித்து மீளாய்வு செய்தல்,— நாட்டில் தற்போது இயங்கி வருகின்ற மாகாண சபைகள் மற்றும் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக செயற்படவுள்ள வடமாகாண சபையின், கௌரவ அமைச்சர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆளும் கட்சியின் முதற்கோலாசான், சபைத் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்கான முறையில் காணப்படாமையினால், இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதற்கான ஒழங்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/ '10

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்தல்,— நாட்டில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளினதும் நகரபிதாக்கள், நகர சபைத் தலைவர்கள், மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதி நகரபிதாக்கள், பிரதி நகர சபைத் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்குமுறையாக இல்லாத காரணத்தால் இது தொட்பாக ஆழமாக ஆராய்ந்து இதற்கான ஒழுங்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/ '10

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக்கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/ '10

கௌரவ புத்திக பதிரண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 91/ '10

கௌரவ புத்திக பதிரண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 92/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 93/ '10

கௌரவ புத்திக பத்திரண,— தேர்தல்ள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 94/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 96/ '10

கௌரவ புத்திக பதிரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுவை தாபித்தல்,— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/ '10

கௌரவ புத்திக பத்திரண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/ '10

கௌரவ புத்திக பதிரண,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை, சேவையில் நிரந்தரமாக்கல்,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளில் மற்றும் திணைக்களங்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளதைப் போன்று சம்பளம், கொடுப்பனவு, நிரந்தர சேவை மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோக அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 105/ '10

கௌரவ புத்திக பத்திரண,- புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.108/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.110/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.111/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலைமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.112/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.114/'10

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.115/'10

கௌரவ புத்திக பத்திரண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.116/'10

கௌரவ புத்திக பதிரண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.118/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.119/ '10

கௌரவ புத்திக பத்திரண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.120/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.127/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு மீள் பெயரிடுதல்,— இலவசக் கல்வியின் தந்தை காலஞ்சென்ற கௌரவ (கலாநிதி) சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களுக்கு மரியாதை செலுத்தும் முகமாக காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு அவரின் பெயரை சூட்டவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.130/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரி குழுவொன்றை நியமித்தல்,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.131/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய நிதியங்களிலிருந்து பணம் உடனடியாக செலுத்துதல்,— ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியனவற்றுக்கு பங்களிப்புச் செய்கின்ற சகல அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் செயல்படுநிலைத் தொழிலிருந்து ஓய்வு பெற்று ஒரு மாத காலத்தின் பின்னர் அவர்களுக்கான நிலுவைகள் செலுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.132/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச ஊடகங்களில் பக்கச் சார்பற்ற தன்மையை உறுதிப்படுத்தல்,— அரச ஊடகங்கள் இலங்கைப் பிரசைகளின் விசேட உரிமையாக இருப்பதாலும், அரச ஊடகங்கள் தொடர்ச்சியாக அரசியல்மயப்பட்டு இருப்பதாலும், இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் அரச ஊடகங்களில் சமமாக நடதப்பட்டு சம வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.133/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச சேவையில் மொழித் தேர்ச்சியின் தேவைப்பாடுகள்,— 2025 ஆம் ஆண்டளவில் சகல அரச சேவை ஊழியர்களும், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கருமங்களை ஆற்றக் கூடியவர்களாகவும் கடிதப் பரிமாற்றல் மூலம் பணியாற்றுவதற்கும் பேசுவதற்கும் இயலுமையுடையவர்களாக இருப்பதை அரசாங்கம் கட்டாயமாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.134/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டினை வழங்குதல்,— இப்பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1%ற்கு சமமாகின்ற பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு வருடாந்த அடிப்படையில் உரித்துடையவர்களாகவேண்டுமென்றும் மேலும் இந்த ஒதுக்கீடானது 50% மூலதனச் செலவின்மீது பயன்படுத்தப்படல் வேண்டுமென்றும் எஞ்சியுள்ளவை தனது வாக்காளர்களின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் விரும்புகின்றதும் அரசாங்கத்தின் வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டதுமான எவ்வடிப்படையிலும் செலவழிக்கப்படலாமென்றும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.138 / 11

கௌரவ புத்திக பத்திரன,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.139/'11

கௌரவ புத்திக பத்திரண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.144/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பாரம்பரிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்,— அம்பாறை மாவட்டத்தில் அருகி வரும் பாரம்பரிய கைத்தொழில்களான கைத்தறித் தொழில், மட்பாண்டம் தயாரித்தல், பனை ஓலை மற்றும் பன்கொண்டு பெட்டி, தண்டு மற்றும் பாய் போன்றவற்றை இழைத்தல், தும்புத் தொழில், பிரம்புத் தொழில் ஆகியவற்றை அபிவிருத்தி செய்து அப்பகுதி மக்களுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களின் வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.147/11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,– பேரிச்சம் பழச் செய்கையை அறிமுகப் படுத்துவற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல்,– மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடியில் பரீட்சார்த்தமாகப் பயிர் செய்யப்பட்ட பீனிக்ஸ் டெக்லிபெரா *(Phoenix dactylifera)* என்ற பேரிச்சம் பழச் செய்கை வெற்றியளித்துள்ளதால், எமது சொந்த மண்ணில் வளர்ந்த நற்சுவைமிக்க இப் பழத்தை சுவைப்பதற்கான வாய்ப்புகள் எமது நாட்டு மக்களுக்கும் கிடைக்கக்கூடியவாறு இப் பேரிச்சம் பழச் செய்கையை எமது நாட்டிலும் அறிமுகப்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இச்சபை கருதுகிறது.

பா.151/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வானோலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— வானொலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.152/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.153/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— மாநகர சபைகளில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவை அறிமுகம் செய்தல்,— 2013 சனவரி 1 ஆம் திகதியளவில் சகல மாநகர சபைகளிலும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவைத் தாபிப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.154/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— உரிமைகள் பிரகடனச் சட்டமூலத்தைச் சட்டமாக்குதல்,— தென்னாபிரிக்காவில் மனித கண்ணியம், சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் ஜனநாயக விழுமியங்களை உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தின் ஆதாரமாகத் திகழ்கின்ற உரிமைகள் பிரகடனச் சட்டத்தை அடியொற்றி, சட்டமூலத்தில் விதித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைவாக அரசினால் மதித்து, பாதுகாத்து, மேம்படுத்தி நிறைவேற்றப்பட்ட வேண்டிய நாட்டின் எல்லா மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் சட்டமூலம் இலங்கையில் சட்டமாக்கப்பட வேண்டும் இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.155/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட படிகள் கொடுப்பனவு,— அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழு ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படாதவிடத்து அமைச்சர், பிரதி அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் எவருக்கும் எந்த வகையான விசேட படிகளும் வழங்கப்படக் கூடாது என இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.158/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்,— இலங்கை புவியியல் ரீதியாக மையப் பகுதியில் நன்கு அமையப்பட்டிருப்பதாக அறியப்பட்டிருந்ததாலும், பண்டைக் காலங்களிலிருந்த கடற்போக்குவரத்து என்பது ஒரு மிக முக்கியமான சேவைத் துறையாக இருந்து வருவதனாலும், அத்துடன் இந்தியா அதன் துறைமுகங்களை மிகுந்த ஆர்வத்துடன் அபிவிருத்தி செய்து மேம்படுத்தி வருகின்ற காரணத்தினாலும் நாம் இந்தியாவுடனும் இந்திய வியாபாரத்துடனும் அணிசேர்ந்து இரண்டு நாடுகளினதும் நன்மைக்காக துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.159/ '12

கௌரவ புத்திக பதிரண,— தேசிய மற்றும் சர்வதேச எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுத்தல்,— தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினரின் எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் தொடர்பாக எதிர்வுகூறலை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட உற்பத்திகள் சார்ந்த சகல துறைகளுடனான இடைத் தொடர்புகளின் ஊடாகவும் நவீன தொழிநுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தியும் உற்பத்திச் செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.160/ '12

கௌரவ புத்திக பதிரண,— இலங்கை மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு டிஜிடல் நூலகமொன்றை தாபித்தல்,— இலங்கை மக்களின் மரபார்ந்த அறிவை பாதுகாத்து, போஷித்து அதனை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்வதற்கும், மரபணு வளங்கள் மற்றும் உயிர் மரபுரிமைகளின் தவறான பயன்பாட்டை தடுப்பதற்காகவும் விரிவான தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவை உணரப்பட்டுள்ளதாலும் சுற்றாடல், சுதேச மருத்துவத் துறை, கமத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் உள்ளடங்கலாக சகல துறைகளுக்கும் டிஜிடல் தொழிநுட்பத்துடனான நவீன நூலகமொன்றை தாபிப்பதற்கும், அதன் பொருட்டு உலக புலமைச்சொத்து அமைப்பு (WIPO ), இலங்கை புலமைச்சொத்து பணியகம், சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமை அலகு உள்ளடங்கலாக சகல துறைகளும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.161/ '12

கௌரவ புத்திக பதிரண,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவைப் பேணிப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவு கையாளப்படும் மருத்துவ முறைகள், கமத்தொழில், உணவுப் பாதுகாப்பு, கைப்பணிக் கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் காணப்படும் மரபார்ந்த அறிவை பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட துறையில் ஈடுபட்டுள்ள மக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு, உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் உள்ளிட்ட ஏற்புடைய துறைகள் ஒருங்கிணைந்து தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.162/ '12

கௌரவ புத்திக பதிரண,— இலங்கைக்கே தனித்துவமானதும் மருத்துவ ரீதியில் பெறுமதிமிக்கதுமான தாவரங்களின் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தைப் பெற்றுக்கொள்ளல்,— வெளிநாடுகள் இலங்கைக்கே தனித்துவமான, பெறுமதிமிக்க மூலிகைத் தாவரங்களின் விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்தினைக் கண்டறிந்து, அவற்றிற்கு மோசடியான முறையில் ஆக்க உரிமம் பெறுவதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்கும் ஔடத உற்பத்தி மற்றும் அதன் மேம்பாட்டிற்கு அக் கூறுகளைப் பயன்படுத்துவதற்கும் உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அனைத்து நிறுவனங்களும் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.163/ '12

கௌரவ புத்திக பதிரண,— மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களை கைவிடல்,— ஜனாதிபதி, பிரதம அமைச்சர் உள்ளிட்ட பாராளுமன்றம், மாகாண சபைகள், பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சகல மக்கள் பிரதிநிதிகளும் மாதாந்தம் தாம் ஆற்றும் சேவைக்குரிய சம்பளம் மற்றும்/அல்லது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதுடன், மேற்படி எந்தவொரு பதவியும் தன்னலமின்றி மேற்கொள்ளப்படுகின்ற கௌரவ சேவைகளாக இல்லாமையினாலும், மேற்படி பதவிகளை வகிப்பவர்களின் பெயர்களுக்கு எதிரே அல்லது பதவிக்கு எதிரே அதிமேதகு, பிரபு அல்லது கௌரவ ஆகிய பெயர்கள் மற்றும் பெயருக்குப் பின்னால் அவர்கள் போன்ற பதங்களை பயன்படுத்துவதானது நகைப்புக்குரிய விடயமாக மாறியுள்ளதனாலும், மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.164/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினை சுதந்திரமானதொரு நிறுவனமாக மாற்றுதல்,— பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சம்பந்தமான சகல தடங்கல்களையும், முக்கியமாக அரசியல் தலையீடுகள் மற்றும் ஆதரவுகளை அகற்றும் சுதந்திரமான ஒரு நிறுவனமாக ஆக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.165/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தபால் மூல வாக்களிப்பை மாற்றீடு செய்வதற்காக "முன்கூட்டிய வாக்களிப்பை" அறிமுகம் செய்தல்,— தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை சீர்செய்ய உதவும் "முன்கூட்டிய வாக்களிப்பினால்" தபால்மூல வாக்களிப்பை மாற்றீட செய்வதற்கு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.166/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஒரு வெளிப்படையான தேர்தல் இடாப்பினை அறிமுகம் செய்வதற்கு அரசியலமைப்பினை திருத்துதல்,— தற்போது பேணப்பட்டு வருகின்ற ஒரு நிலையான பட்டியலைப் போல் அல்லாது, தேர்தல் இடாப்பு வெளிப்படையான ஓர் இடாப்பாக இருக்கக் கூடியவாறு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.170/ '12

கௌரவ புத்திக பதிரண,— முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரித்தல்,— பல்வேறு தரப்பினரால் முதிய பிரசைகள் புறக்கணிக்கப்படுவதால் நேரிடுகின்ற அநீதிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.171/ '12

கௌரவ புத்திக பதிரண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.172/ '12

கௌரவ புத்திக பதிரண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.175/'13

கௌரவ புத்திக பதிரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்த்தல்,— இலங்கையின் எதிர்கால இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவும், மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் பாடசாலை பாடத்திட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.176/'13

கௌரவ புத்திக பதிரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வியியற் கல்லூரியொன்றை தாபித்தல்,— இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கேற்ப மேற்படி துறையில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கேற்ற வகையில் பாடசாலை மட்டத்தில் அதனை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை தொடர்பாக கல்வியியற் கல்லூரியொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.177/'13

கௌரவ புத்திக்க பதிரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்தல்,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் 25-30 வருடங்கள் பழமையான பாடத் திட்டங்களின் கீழேயே நடைபெறுவதால், அந்நிலைமையை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்படி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.178/'13

கௌரவ புத்திக பதிரண,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த நேரடி மற்றும் மறைமுக தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள இலங்கையில் வாழும் இளைஞர்கள், ஓய்வுபெற்ற முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் ஆகிய சமூக குழுக்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் குறித்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களது முனைப்புடனான பங்களிப்பை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.179/'13

கௌரவ புத்திக பதிரண,— இலங்கை/சுதேச சமையற்கலை தொடர்பில் நாட்டினுள் மக்கள் மனப்பான்மைகளை வளர்த்தல்,— இலங்கை/சுதேச சமையற்கலை பற்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே அதிக ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நாட்டினுள் மக்களின் மனப்பான்மைகளை இதன்மீது செலுத்துவதற்காக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் பாடநெறியில் சமையற்கலையை ஒரு பாடமாக சேர்ப்பதற்கும், அரச மற்றும் தனியார் துறை தலையீட்டின் அடிப்படையில் ஆராய்ச்சித் துறைகளை ஊக்குவிப்பதன் ஊடாக புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளவும், இதனோடு தொடர்புடைய நிறுவன முறைமைகளை இணைத்து சான்றிதழ், டிப்ளோமா, பட்டம், பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை உருவாக்குவதன் மூலம் இத் துறை பற்றி மக்கள் மத்தியில் விரிவான விதத்தில் மனப்பான்மை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.180/'13

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது சுவையூட்டல் மற்றும் கலவையாக்கல் கலை, சமையற்கலை, நிறமூட்டல், உணவு வெட்டுதல் உள்ளிட்ட பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் இதனோடு இணைந்துள்ள இலங்கையின் உணவுக் கலாசாரம் பற்றி கற்றல், கற்பித்தல் வழிமுறைகள் ஊடாக எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்கும் அதேபோன்று உள்நாட்டு, வெளிநாட்டு மக்களிடையே எமது உணவுக் கலாசாரத்தை பரப்புவதன் ஊடாக இலங்கையின் தனித்துவத்தை சர்வதேச ரீதியாக மேலோங்கச் செய்வதற்குமான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.183/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய நட்டஈட்டு வழக்குகளுக்கு சுருக்கமுறை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தல்,— மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய திடீர் விபத்துகளினால் உயிரிழந்த ஆட்களின் வாரிசுகளுக்கும் தங்கிவாழ்வோருக்கும், அவ்வாறான விபத்துகளினால் காயமடைந்த ஆட்களுக்கும் நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்கு மிகச் சிரமமானதும் நீண்டதுமான நீதிமன்ற செயற்பாடொன்றில் பங்குபற்ற நேர்ந்துள்ளதால் அவர்கள் மிகவும் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்படுவதனால், மோட்டார் வாகனங்கள் தொடர்பான நட்டஈட்டு வழக்குகளுக்கு சுருக்கமுறை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தும் வகையில் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.186/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் அல்லது நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை அதிகளவில் கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.187/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— அமைச்சர்களுக்கான பாதுகாப்பு ஆளணியினரை அரசியல்வாதிகளுக்கு மாத்திரம் வரையறுத்தல்,— அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவு (MSD ) ஊடாக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஆளணியினரை அரசியல்வாதிகளுக்கு மாத்திரமே வரையறுக்கப்பட வேண்டும் எனவும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கக் கூடாது எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.188/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தேசிய விளையாட்டான கரப்பாந்தாட்ட விளையாட்டைத் தரம் உயர்த்துதல்,— உயர்ந்த அளவிலான திறனையும், சுறுசுறுப்பையும், உடலுறுதியையும், தீர்மானம் மேற்கொள்ளுதலையும், குழு முயற்சியையும் வேண்டி நிற்கும், அற்புதமான தேசிய விளையாட்டாகிய கரப்பாந்தாட்டத்தைத் தரமுயர்த்துவதற்கு, நன்கு திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.189/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— "பீறலு" என அறியப்படும், பாரம்பரியக் கைத்தறி பின்னல் ஆடைக் கைத்தொழிலை தரமுயர்த்துதல்,— "பீறலு" குடிசைக் கைத்தொழிலை விருத்தி செய்து அதன் மூலம் பின்னல் ஆடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கிராமிய மக்கள் உயர் வருமானத்தைப் பெற்றுக் கொள்ள நவீன வசதிகளை ஏற்பாடு செய்யவும் உல்லாசப் பயணிகளிடையே, பின்னல் ஆடையையும், பின்னல் ஆடை உற்பத்திகளையும், பிரபல்யப்படுத்தவும், வினைத்திறனும், அர்த்தபுஷ்டியும் உடைய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.190/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார காரணங்களுக்காக இளம் தாய்மார் இலங்கையை விட்டுச் செல்வதை தடுப்பதற்கான சட்டவாக்கம்,— தாய்மார்கள் ஒரு வலுவான மற்றும் சந்தோசமான குடும்ப சூழ்நிலை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பதாலும் மற்றும் கடந்த காலங்களில் அத்தகைய தாய்மார்கள் வலுவான குடும்ப அலகின் மதிப்பை இல்லாதொழித்து பாரிய சமூக நெருக்கடியை உருவாக்கி இலங்கையை விட்டு தொழிலுக்காக வெளியேறியதாலும், ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளின் இளம் தாய்மார்கள் பொருளாதாரக் காரணங்களுக்காக இலங்கையை விட்டு வெளியேறுவதை தடுப்பதற்கான பொருத்தமான சட்டவாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.191/ '13

கௌரவ புத்திக பத்திரண,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்களின் ஆராய்ச்சிகளுக்கான ஆய்வுக் கட்டுரைகளை அமைச்சுக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டு தயாரித்தல்,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்கள் தமது பாடநெறிகள் தொடர்பில் சமர்ப்பிக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை நாட்டின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்துதல் முக்கியமானதாகையால், மேற்படி ஆய்வுக் கட்டுரைகளை மேற்பார்வை செய்யும் பேராசிரியர்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகள் ஏற்புடையதாகும் அமைச்சுக்களுக்கும் இடையில் சிறந்த தொடர்பினை ஏற்படுத்தும் முகமாக, குறித்த அமைச்சின் உத்தியோகத்தரொருவரை நியமிப்பதன் மூலம் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் மூலம் அமைச்சின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் நடைமுறை இலக்குகளை பூர்த்தி செய்யக் கூடிய விதத்திலான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமன இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.192/ '13

கௌரவ புத்திக பதிரண,— 18 வயது நிரம்பியவுடன் தேருநர் இடாப்புகளில் பெயரைச் சேர்த்தல்,— தேர்தல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் தேருநர் இடாப்புகளைத் திருத்தும் திகதிக்கு பின்னர் அல்லது முன்னரான திகதியில் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களுக்கு உரிய வயது நிரம்பிய திகதியிலேயே தேருநர் இடாப்புகளில் தமது பெயரை சேர்க்கக் கூடிய விதத்தில் நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.193/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— "தேசிய சுகாதாரப் பேரவை பணித்துறை ஆட்சிமுறையொன்றை உருவாக்கல்",— சுகாதார பராமரிப்பு முகாமைத்துவத்திற்கு இன்றுள்ள நிலைமையை விட அதிகளவான வழிகாட்டலும் முக்கியத்துவமும் வழங்கப்பட வேண்டியுள்ளதால் பிரதம அமைச்சருக்கு அறிக்கையிடுவதற்கும் நிரல் அமைச்சில் ஊடுருவிச் சென்று உச்ச பயனைப் பெறாத நிலைமையை இல்லாதொழிக்கவும் தேசிய சுகாதாரப் பேரவை பணித்துறை ஆட்சி முறை" ஒன்றை உருவாக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.195/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வூதிய பணிக்கொடை மீது விதிக்கப்படும் வரிகளுக்கு விலக்களித்தல்,— இந்நாட்டின் விதிக்கப்பட்டுள்ள வரிகள் விசேடமாக இறுதியான நன்மைகள் மீதான வரிகள் மிகவும் சீரற்றதாகவுள்ளதாலும், ஊழியர்கள் கடின உழைப்பின் பின்னர் பெறும் அவர்களின் ஓய்வு பெற்று அவர்கள் பெறும் பணிக்கொடையானது 36% வரிக்கு உட்படுவதாலும் ஓய்வூதிய பணிக்கொடை மீது விதிக்கப்படும் வரிகளுக்கு முழுமையான விலக்களிப்பு அளிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.196/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர ஆசனம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள இந்தியாவுக்கு உதவுதல்,— இந்தியா இலங்கையின் நட்பு நாடு என்ற வகையில் ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர ஆசனம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு இந்தியாவுக்கு உதவ வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.197/ '13

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையினுள் சேலைன் உற்பத்திக்கான முறையான வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்,— இலங்கையினுள் வருடாந்தம் பாரியளவில் சேலைன் பயன்படுத்தப்படுவதுடன், சேலைன் இறக்குமதிக்காக பாரியளவு நிதி வருடாந்தம் வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுவதால், மேற்படி வெளிநாட்டுச் செலாவணியை நாட்டினுள் சேமிக்கும் நோக்கத்துடன், இலங்கையினுள் காணப்படுகின்ற உள்நாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேலைன் உற்பத்தி செய்வதற்கு அரச, தனியார்துறை அல்லது கூட்டுறவுத்துறையை இணைத்துக் கொண்டு முறையானதொரு வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் உருவாக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.198/ '13

கௌரவ புத்திக பதிரண,— தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்டு புதிய உற்பத்திகளை உருவாக்குதல்,— இலங்கையில் வருடாந்தம் பெருமளவில் தேங்காய் நீர் விரயமாவதால், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தின் கீழ் தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்ட புதிய உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு உருவாக்குவதற்கான முறையியலொன்று அமுல்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.199/ ' 13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— ஏற்றுமதி சந்தைக்காக தூரியான் பயிர்செய்தல்,— அதிக விலைமதிப்புள்ளதும் ஏற்றுமதிச் சந்தையில் மிகுந்த கேள்வியைக் கொண்டதுமான பிரபல்யமான தூரியான் பழத்தை, நாடு கணிசமான அளவு வெளிநாட்டு செலாவணியை ஈட்டக்கூடியவாறு வர்த்தக ரீதியில் பயிர்செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.200/ ' 13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மும்மொழி இலங்கைக்கான பத்தாண்டுத் திட்டம்,— "மும்மொழி இலங்கைக்கான பத்தாண்டு திட்டம் 2012-2021" எனும் பத்தாண்டு கால அமைச்சரவைத் தீர்மானத்தை வரவேற்பதுடன் பன்மொழிப் பேசும் பல்லின மக்களின் முழு ஆதரவைப் பெற்று முழு நாட்டுக்கும் பயன்பெறக்கூடிய முறையில் அரச நிறுவனங்கள் தனிப்பட்ட நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் விரிவாக விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 77/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரச சேவையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்,— 2006/6 சம்பள மீள்திருத்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2006.06.01 ஆம் திகதியிலிருந்து அமுலாகின்றவாறு அரச ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் வழங்கப்பட்டமையால் 2006.06.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் அதன் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கிடையில் பாரிய சம்பள முரண்பாடு நிலவுவதால் அதனை நீக்குவதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.201/' 14

கௌரவ புத்திக பதிரண,— கடலில் புதிய வளங்களை ஆய்வு செய்தல்,— மிகப் பெரிய கடற் பிராந்தியத்தைக் கொண்டுள்ளதொரு நாடான இலங்கை, மீன்பிடிக் கைத்தொழிலுக்கு மாத்திரம் முன்னுரிமையளித்துள்ளதோடு, கடல் சார்ந்ததாக பெருமளவு இயற்கை வளங்கள் காணப்படுவதால், நாட்டுக்கு பெரும் எண்ணிக்கையிலான தொழில்வாய்ப்புகளையும், செல்வத்தையும் ஈட்டும் நோக்கத்துடன் கடல் வளங்கள் தொடர்பாக முறைசார்ந்த மேலதிக ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.202/' 14

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையின் மீன் வளத்தை வெளிநாட்டவர்கள் பிடிப்பதைத் தடுத்தல்,— இலங்கையின் மீனவர்களுக்கு பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்துகின்ற வகையில் இலங்கை கடற் பிராந்தியத்திலுள்ள மீன் வளம் வெளிநாட்டவர்களினால் பிடிக்கப்படுவதால், இலங்கை கடற் பிராந்தியத்தில் மீன் பிடிப்பதையும், வெளிநாட்டுப் படகுகள் மீன் பிடிப்பதற்கான இறங்குதுறையாக பயன்படுத்துவதையும் தடுப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.203/' 14

கௌரவ புத்திக பதிரண,— பலா உற்பத்தியை அதிகரிக்கச் செய்து அது சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்,— மிகவும் சுவையானதும், மருத்துவக் குணம் கொண்டதும், இரசாயனப் பதார்த்தங்கள் இன்றி பயிரிடக் கூடியதுமான பலாச் செய்கையை விஸ்தரிப்பதன் ஊடாக அது சார்ந்த உற்பத்திகளை அதிகரிக்கச் செய்து அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணியை எமது நாட்டினால் ஈட்டிக்கொள்ள முடியுமாயுள்ளதால், அது தொடர்பில் அரசாங்கத்தின் தலையீட்டுடன் முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.204/' 14

கௌரவ புத்திக பதிரண,— தேசிய கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்றை வருடாந்தம் ஒழுங்குசெய்தல்,— ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமெனில், முக்கியமாக கமத்தொழிலில் செழிப்புற்றிருத்தல் வேண்டுமென்பதால், நாட்டை வளப்படுத்தும் கமக்காரர்களுக்கு தமது தொழில் தொடர்பாக அபிமானம் ஏற்படும் வகையில் முறைசார்ந்ததொரு ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.205/' 14

கௌரவ புத்திக பதிரண,— சலுகை விலையில் LED மின்குமிழிகளை நுகர்வோருக்கு வழங்குதல்,— இல்லங்களை ஒளியூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தரம் மிக்க LED மின்குமிழிகளின் விலை அதிகம் என்பதால், மின்சார சபை தலையிட்டு சலுகை விலையிலும் தவணைக் கொடுப்பனவு முறையிலும் இந்த மின் குமிழிகளை நுகர்வோருக்கு பெற்றுக் கொடுத்து தேசிய ரீதியில் பெருமளவில் மின்சாரத்தை சேமிப்பதற்கும், LED மின்குமிழிகளை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதன் மூலம் மின்சார சபைக்கு மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கும் இயலுமானவாறு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.206/' 14

கௌரவ புத்திக பதிரண,— சிறிய அளவிலான விளையாட்டுப் பொருட்கள் தொழிற்சாலைகளை விஸ்தரித்தல்,— இலங்கையினுள் விளையாட்டுப் பொருட்களுக்கு பாரியதொரு சந்தை காணப்பட்ட போதிலும், நாட்டினுள் அவை சிறிய அளவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்ற அதேவேளை, அதற்காக சீனா முதற்கொண்ட ஏனைய நாடுகளுக்கு பெருந்தொகை வெளிநாட்டுச் செலாவணி பாய்ச்சப்படுவதால், சிறியதொரு செலவினத்தை ஏற்க வேண்டியதான இக் கைத்தொழிலை கிராமியப் பிரதேசங்களில் விஸ்தரிக்கும் பொருட்டு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.208/ '14

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் மருந்தாக்கல் தொழிற்சாலைகளை ஆரம்பித்தல்,— இலங்கையில் மருந்தாக்கலானது தற்போது ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாலும், மருந்துகளின் இறக்குமதிக்கென வருடமொன்றில் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணி செலவிடப்படுவதாலும், முன்னேற்றமடைந்த மனித வளத்தைக் கொண்டதொரு நாடு என்ற வகையில் இலங்கைக்கு அத்தியாவசியமான மருந்து வகைகளை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்வதற்கான வசதிகளை அரசாங்கத்தின் தலையீட்டுடன் பெற்றுக்கொடுத்து மருந்தாக்கல் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.209/' 14

கௌரவ புத்திக பதிரண,— பாடசாலை பாடத்திட்டத்தில் உளவியல் பாடத்தைச் சேர்த்தல்,— பாடசாலை மாணவர் சமுதாயத்தை ஆரோக்கியமான மனநிலை கொண்ட, சாதுரியமான முடிவுகளை எடுக்கக் கூடியவர்களாக தயார்படுத்தும் பொருட்டு ஆறாம் தரத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பௌத்த உளவியல் மற்றும் மேலைத்தேய உளவியல் ஆகிய இரண்டு பாடங்களையும் ஒருங்கிணைத்து முறையாக தயாரிக்கப்பட்ட "உளவியலும் தியானமும்" என்ற பெயரில் ஒரு பாடத்தை பாடசாலை பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.210/' 14

கௌரவ புத்திக பதிரண,— ஓய்வுபெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைத்தல்,— ஓய்வு பெற்றவர்களுக்கான உளவள ஆலோசனைச் சேவைகள், மருத்துவ வசதிகள் மற்றும் பகல்நேர காப்பக சேவைகள் ஆகிய வயோதிகர்களுக்குத் தேவையான பல்வேறு நலன்புரிச் சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைப்பதற்கும், மேற்படி நிலையங்களை மையப்படுத்தி ஏதேனும் உற்பத்தி நடவடிக்கையில் ஓய்வு பெற்றவர்களை ஈடுபடுத்துவதன் ஊடாக அவர்களின் வாழ்க்கைக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கின்ற அதேவேளை, மேலதிக வருவாயை ஈட்டிக்கொள்ளக் கூடிய வகையிலும் அரசாங்கத்தின் தலையீட்டுடன் நாடு முழுவதிலும் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.211/' 14

கௌரவ புத்திக பதிரண,— ஓய்வுபெற்றவர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்தல்,— ஓய்வு பெற்றுள்ள அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கும், அவர்களுடைய நலன்புரி நடவடிக்கைகளுக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.